பிரதம நீதிபதியின் பொருத்தமற்ற வாதம்!

Phone No. 4502 | Regd. No. M. 5458
விலை அணா ஒன்று | (இலங்கை 10 சதம்)

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிட தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (14—12—49) | வெளியீடு (15—12—49) | இதழ் 116

மக்கள் மன்றத்திலும் 'மன சுத்தி' வேண்டும்!

—:0:—

ஆரிய-திராவிட பிரச்னை அலட்சியப்படுத்த வேண்டியதா?

—(0)—

உபநிஷத்தை ஓதுந் திருவாய் திருக்குறளைத் தீண்டாததேன்?

"ஜனவரி 26-ம் தேதியன்று இந்தியா சுதந்தரக் குடியரசாகப் போகிறது. நமக்குக் கிடைத்திருக்கும் இந்த ஜனநாயக ஆட்சி, அரசியலில் மட்டுமின்றி பொருளியல், சமுதாய இயல் ஆகிய துறைகளிலும் பயன் தரும்படி செய்யவேண்டும்."

"ஆரியர் — திராவிடர் என்ற பிரச்னை பற்றிய கவலை நமக்கு வேண்டாம். நாம் ஒரு வீரப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற அளவிலே நம் முன்னோர்கள் சென்ற ஆத்மீகப் பாதையில் சென்று பயனடைய முயல்வோமாக"

சென்னை உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி தோழர் பி. வி. ராஜமன்னார் அவர்கள் அண்மையில் திருச்சியில் பல்கலைக் கழக கூட்டமொன்றில் பேசியபோது இவ்வண்ணம் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியலில் மட்டுமின்றி பொருளியல், சமுதாய இயல் ஆகியவற்றிலும் ஜனநாயகம் நிலவவே வேண்டும் என நீதிபதியவர்கள் விரும்புவது மகிழ்ச்சிக்குரிய செய்தியேயானாலும், அவரது பேச்சின் பிற்பகுதியில் ஆரியர்—திராவிடர் பிரச்னை பற்றிய கவலை வேண்டாமென்று பேசியிருப்பது முன்னுக்குப் பின் முரண்பட்டதாகவே யிருக்கிறது.

அரசியலில் மட்டுமின்றி பொருளியலிலும், சமுகயத்திலும் ஜனநாயகம் நிலவவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளும் நீதிபதி, ஆரிய-திராவிடப் பிரச்னையை ஏன் தட்டிக் கழிக்க விரும்புகிறார்? ஆரிய-திராவிட பிரச்னை இம்மூவிஷயங்களுக்கும் சம்பந்தமில்லாதது என்று கருதுகிறாரா அவர்? சமுதாயத்தில் சமத்துவம் நிலவாத வரையில் அரசியல், பொருளியல் சமத்துவத்தையோ, ஜனநாயகத்தையோ நாம் காண முடியாது. சமுதாய சமத்துவத்துக்கு ஆரிய-திராவிட பிரச்னை அடிப்படை என்கிறோம் அந்த அடிப்படையை அலட்சியப்படுத்திவிட்டு மற்ற பிரச்னைகளை கவனிக்கச் சொல்லுகிறார் நீதிபதி. இது எங்ஙனம் பொருந்தும்? மற்ற நீதிகளை யறிந்த நீதிபதி இந்த அடிப்படை நீதியை மறந்துவிட்டது தான் விந்தையிலும் விந்தை!

தோழர் ராஜமன்னார் மேலும் பேசுகையில், உபநிஷதம் காட்டும் உண்மைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அதுவே நம் முன்னோரை நாம் பின்பற்றும் முறையென்றும் விளக்கியிருக்கிறார். நீதிபதி அவர்களின் வாதப்படியே வைத்துக்கொண்டாலும், ஆரிய திராவிடப் பிரச்னை எங்ஙனம் அலட்சியத்திற்குரியதாகும்? உபநிஷத்தை நமக்குக் காட்டும் நீதிபதியிடம், நாம் திருக்குறளை நீட்டி, ஐயா நீதிபதியவர்களே, இதுதான் எங்கள் முன்னோர் எமக்கென வகுத்திருக்கும் அறநூல், இதனை போற்றவேண்டியது எமது கடன். குறள் போற்றப்படுவதானால், உபநிஷதம் போன்ற வட மொழி நூற்கள் காட்டும் ஒரு குலத்துக்கொரு நீதி கண்டிக்கப்பட வேண்டியவையாகும். அப்படிப்பட்ட நிலைமைக்கு வரும்போதுதான் ஆரிய-திராவிட பிரச்னை அவசியமான பிரச்னை என்று கருதுகிறோம் நாங்கள். அதுமட்டுமல்ல, ஆரிய கலாச்சாரங்களுக்கும், நூல்களுக்கும் ஆதரவு தந்து, திராவிட கலாச்சாரம், திராவிட நூல் ஆகியவற்றை இழிவுபடுத்துவோர் இந்நாட்டில் இருக்கும் வரையில் ஆரிய-திராவிடப் பிரச்னையும் இருந்தே தீரும். அதனை யாரும் அலட்சியமாகக் கருத முடியாது. உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி திராவிடர் தங்களுக்கு இது அற்ப விஷயமாகத் தோன்றலாம் ஆனால் இப்பிரச்னை திராவிடரின் மன்றும் வாழ்வையே பின்னிக் கிடக்கிறது. ... தை நாங்கள் உணருகிறோம். அப்படி உணர்கின்ற காரணத்தால் விடாது போராடி வருகிறோம்" என்றுதான் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முன்னோர்கள் சிறப்பையும் அறிவாழத்தையும் சிறப்பிக்க வரும் நம நீதிபதி, காளிதாசரையும், பவபூதியையுமே எடுத்துக்காட்டாகக் கூறி, ஆரிய வடமொழிக்கு ஏற்றம் தந்திருக்கும்போது, நீதி மன்றத்தில் மட்டுமல்லாது, மக்கள் மன்றத்திலுங்கூட நடுநிலைமை வகிக்க வேண்டிய நீதிபதியே இக் காரியத்தைத் துணிந்து செய்யும்போது, 'சாதாரணவர்' எப்படி அலட்சியப்படுத்திவிட முடியும் ஆரிய — திராவிடப் பிரச்னையை என்று கேட்கிறோம். சிலப்பதிகாரம் தந்த இளங்கோ, மேகலை வழங்கிய சாத்தனார் இவர்களும் எண்ணிறந்த தமிழ்ப் பெரும் புலவர் பெருமக்களுள் ஒருவர்கூட தட்டுப்படவில்லையே நீதிபதிக்கு என்று நினைக்கும்போது, வெட்கப்படாமல், கண்ணீர் பெருகுகிறது.

[திராவிடர்ச் சேர்க்கை பார்க்க]

"இந்து ராஜ்யம் காண வந்தோமே, நாமே"!

—:(0):—

சல்லடங் கட்டி சவால் விடுகிறார் மகாசபை தேசபந்து!

வரப்போகும் பொதுத்தேர்தலில் காங்கிரஸை போட்டி போட இந்துமகாசபை முடிவு செய்துவிட்டதென்று செயலாளர் தோழர் வி. ஜி. தேசபந்து சவால் விடுத்திருக்கிறார்.

காங்கிரஸ் பொதுமக்களுக்கு நன்மை யெதுவும் செய்யத் தவறிவிட்டது.

இந்துமகாசபை பலமிக்க அரசியல் ஸ்தாபனமாகத் தோன்றுவதற்கு மக்களின் நல்லாதரவு தேவை யென்று, தோழர் தேசபந்து லக்னோவில் 11-ந்தேதி பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த தோழர் தேஜ் நாராயண் குறிப்பிட்டதாவது:— இந்து ராஜ்யமொன்றை நிறுவும் புதிய அரசியல் திட்டத்துடன் நாங்கள் மீண்டும் அரசியலில் புகுந்துள்ளோம். கம்யூனிஸ வகுப்புவாதத்தையும் ... நிறுத்துவதே எங்களது புதிய திட்டத்தின் முக்கிய நோக்கம்."

இந்து ராஜ்யக் கொள்கையை ஒரே மகானே சரியான வழியில் அழைத்துச் சென்று, இந்தியாவின் எதிர்காலத்தை சிறப்புறச் செய்யுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொழிலாளர் இதயத்தை உணர்த்தும் யந்திரம்!

வாஷிங்டன், டிச. 13—

அமெரிக்க இரசாயன ஸ்தாபனம் தொழிலாளர்கள், சிப்பந்திகள் எல்லாரும் விசுவாசமுள்ளவர்களா என்பதைக் கண்டு பிடிக்க ஒரு இயந்திரத்தை உபயோகித்து வருகின்றது. இது வெற்றிகரமாக இருக்கிறதென்பது தெரிந்தால் சர்க்கார் இலாக்காக்களிலும் உபயோகிக்கப்படும். — ஞானோ

டாலர் பிரச்னையைத் தீர்க்க....!

லண்டன், டிச. 13—

டாலர் பிரச்னையைத் தீர்க்க ... ஆஸ்திரேலியப் பிரதமர் மந்திரி மென்ஸி ஒரு யோசனையை வைத்திருப்பதாகவும் அதைத் தெரிவிக்க ஒரு காமன்வெல்த் பொருளாதார மாநாட்டை கூட்டும்படி அவர் பிரிட்டிஷ் சர்க்காரை கேட்கச் சொல்லப் போவதாகவும் விட்னி செய்தி ஒன்று கூறுகிறது.

தெ. இ. ர. பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

ரயில்வேப் பாதைகளில் நாசவேலைகளுக்கான குறிப்புத் தனங்களையும் ஏற்படாத வகையில் ரயில்வேப் போலீசார் தென்னிந்திய ரயில்வேயின் பற்பல பகுதிகளிலும் முன்னேற்பாடுகள் புரிந்து வருகின்றனரென்று தெரிகிறது.

போர்மோசா விஷயத்தில் அமெரிக்கா தலையிடாதாம்

—(0)—

ஓகினுவை மட்டும் பலப்படுத்த முடிவு

தேசீய சீனவுக்கு ஒதுக்கிய டாலர் வேறு வகைக்கு செலவிடப்படும்!

லண்டன், டிச. 13—

போர்மோஸா விஷயத்தில் அமெரிக்கா தலையிட வேண்டுமா, என்ற பிரச்சினை குறித்து யு. எஸ். ராணுவத் தலைவர்களுக்கும் மக் ஆர்தர் உள்பட பல ராணுவ அதிகாரிகளுக்குமிடையேயிருந்த தகராறு தீர்க்கப்பட்டுவிட்டது என்று வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

அம்முடிவுப்படி அமெரிக்கா போர்மோசா விஷயத்தில் தலையிடாது. பல் ஹார்பர் சம்பவத்துக்கு முன், பசிபிக் பாதுகாப்பு அரணாக எப்பிரதேசம் இருந்து வந்ததோ, அதுவே இனியும் இருந்து வருமாம். ஒகினுவா தீவை பலமான தளமாகச் செய்ய முயற்சிக்கப்படுமாம்.

அன்றி தேசீய சீனவுக்காக வோட் செய்யப்பட்ட 10 கோடி டாலர்கள் வேறு முக்கிய திட்டங்களுக்கும் அட்லாண்டிக் ஒப்பந்த விஷயத்திற்காகவும் செலவிடப்படுமாம்.

சிங்கப்பூர் ஹாங்ஹாங்தன நிர்வாகச் செலவுக்கு, பிரிட்டனுக்கு உதவியாக பணத்தைச் செலவிடுவது பற்றியும் அமெரிக்கா ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

மார்ஷல் உதவித் திட்ட வலை ஆசியா மீதும் வீசப்படுமாம்

இந்தியா பாகிஸ்தான் பர்மாவையும் சிக்கவைக்க ஏற்பாடு

கெய்ரோ, டிச. 13—

மார்ஷல் உதவி ஏற்பாட்டை ஆசிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், சீக்கிரமே அது அமெரிக்க செனெட்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவதாக குளோப் நிருபர் கூறுகிறார்.

இந்தத் திட்டப்படி அமெரிக்காவுக்கு 150000 கோடி டாலர்கள் செலவாகலாம் என்று வல்லுநர்கள் தயாரித்துள்ள எண்டிமேட்கள் கூறுகின்றன.

இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டால் இந்தியா, பாகிஸ்தான், பர்மா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து பிலிப்பைன் ஆகிய நாடுகளுக்கு உதவி கிடைக்கும். அநேகமாக இந்தோனேஷியாவும் இந்த ஜாபிதாவில் இடம் பெறலாம்.

இது சம்பந்தப்பட்ட நாடுகளைக் கலந்தாலோசிக்க, ஒரு விசேஷ மாநாட்டை ஜனவரியில் கூட்டவேண்டும் என்று பிலிப்பைன் பிரசிடெண்ட் கேட்டுக்கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

புதிய ரைஸ்மில்களுக்கு அனுமதியில்லை

மில்கள் மூலம் அரிசி அரைக்கும் பழக்கத்தைக் கூடியவரையில் கட்டுப்படுத்தி, கைக்குத்தல் அரிசியை ... ஊக்குவித்து, அதன் மூலம் அரிசியின் போஷாக்கு சக்தியை முழு அளவுக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ... சர்க்காரின் கொள்கையை அனுசரித்து, இனிமேல் புதிய ரைஸ்மில்களுக்கு லைசென்ஸ் தருவதில்லையென முடிவு செய்யப்பட்டதாக ... குறிப்பொன்று கூறுகிறது. ... இதுபற்றி ... தெரியவருகிறதாம்.

மாலை மணி

சென்னை 14—12—49 புதன்கிழமை

புறக்கணிப்பின் விளைவே

இந்தியத் துணைக்கண்டத்தில், இற்றை நடைமுறை ஆட்சியில் இருந்துவரும் 'இந்துச் சட்டம்', காலத்திற்கும் கருத்திற்கும் பொருந்தவில்லை; வேண்டாத பழமையில்கிடந்து நெளிகிறது; மக்களின் சமத்துவ வாழ்விற்குத் தடைக்கல்லாக இருந்து வருகிறது; எனவே, இந்தச் சட்டம் வாழ்வுக்கேற்றவகையில், காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற முறையில் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை, சீர்திருத்த அறிஞர் பெருமக்கள் பலரும், பலநாட்களாகவே வற்புறுத்திவந்தனர். சமுதாயச் சீர்திருத்த நோக்கத்தில் மிக்க ஆர்வங்கொண்டவரான டாக்டர் அம்பேத்கார், அவ்வெண்ணத்தை நிறைவேற்றிவைக்க வேண்டிய 'இந்துச் சட்ட மசோதா' ஒன்றை, இந்தியப் பாராளு மன்றத்தில் கொண்டு வந்துள்ளார்.

சீர்திருத்த நோக்கங்கொண்ட அறிவுடையோர்மிகச் சிலராகவும், வைதீகக் களிம்பு ஏறிய உள்ளமுடையவர்கள் ஏராளமாகவும் இத்துணைக் கண்டத்தில் இருப்பதால், எந்தச் சீர்திருத்த கோட்பாடும் எதிர்ப்புக்கிடையே, எதிர் நீச்சலில் நிலைபெற வேண்டியிருக்கிறது. அந்த நிலைமையை ஒட்டி, 'இந்துச் சட்ட மசோதா'வுக்கு எதிர்ப்பாக வைதிகபுரியினரின் 'போர்ப்படை'கிளம்பி இருக்கிறது.

'இந்துச் சட்ட மசோதா' பற்றி விவாதம் ஆரம்பிக்க இருக்கும் இந்தியப் பாராளு மன்றத்தின் முன்,12-12-49 ம் நாளன்று, வைதிகபுரியின் ஆர்ப்பாட்டக்காரர்கள், கிளர்ச்சி வேடிக்கைகள்நடத்தியுள்ளனர். ஐந்நூற்றுக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், தங்கள் கிளர்ச்சி முறைகளாக-காந்திக் குல்லாய்களைக் கொளுத்தியிருக்கிருர்கள்-'கொடும்பாவி' கட்டி எரித்திருக்கிருர்கள்-'இந்து தர்மப்பேடி' பெண்களைக் கொண்டு, 'கொடும்பாவி'யின் முன்னுல் மாரடித்து அழச் சொல்லி யிருக்கிருர்கள்- 'இந்துச் சட்ட மசோதா வீழ்க", "நேரு ஆட்சி வீழ்க," "மத்தில் தலையிடாதே" என்று கூச்சல் எழுப்பியிருக்கிருர்கள் இவ்வளவும் இந்துச் சட்டத்தில்' திருத்தம் ஏதும் செய்யப்படக்கூடாதென்பதற்காகவே. இந்நாடு சமுதாயத் துறையில் எவ்வளவு தூரம் பின்னணியில் இருக்கிறது-பின்னணியில் இருக்கவே வைதிகபுரியினர் விரும்புகின்றனர் என்பது, இந்த வேண்டாத எதிர்ப்புக் கிளர்ச்சியிலுலேயே இனிது உணரலாம்.

அறியாமை காரணமாகவும், தம் சொந்த நலவாழ்வு காரணமாகவும், பாமர-படித்த வைதிகர்கள் சீர்திருத்தத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றனர்! உள்ளத்தில்வஞ்சக எண்ணங்கொண்ட படித்த-ஆதிக்க வைதிகர்கள், பாமர வைதிகர்களைத் தம்பக்கம் இழுத்துக்கொண்டு, நாட்டைப் பாழ்பட்டப் பழமையிலே வைத்துக் கொள்ள எண்ணுகின்றனர்; அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட இந்நாட்டில் சூழ்நிலை அமைந்திருக்கிறபடியால்தான், எந்த நல்ல சீர்திருத்தமும், தேவையான அளவில், உடனடியாக ஆற்ற முடியாமல் போய்விடுகிறது. சமுதாயத்தில் இருந்து வரும் சீர்கேடான சூழ்நிலை மாறவேண்டும் என்ற உணர்வை, மக்களுக்கு இதுவரை காங்கிரஸ் ஊட்டிவராததன் காரணத்தினுலேயேதான், இப்படிப்பட்ட வேண்டாத எதிர்ப்புக் கிளர்ச்சிகள் எழும்பியுள்ளன

காங்கிரஸ் இயக்கம். அரசியல் பற்றிய உணர்வை மக்களுக்குக்கூறி வந்த அதேகாலத்தில். சமுதாயச் சீர்திருத்தம் பற்றிய கருத்துக்களையும் கொடுத்து வந்திருந்தால், நாட்டுமக்கள் 'இந்துச் சட்ட மசோதா'வை எதிர்ப்பது போன்ற இழிதகைமையில் இறங்கியிருக்க மாட்டார்கள். காங்கிரஸ், அரசியலில் கவனஞ் செலுத்திய அளவுக்கு, சமுதாயத்தில் கண்ணேட்டம் செலுத்த மறுத்தது-மறந்தது! அதன் விளைவை இப்பொழுது அனுபவிக்கிறது.

காங்கிரஸின் ஆரம்பகாலத்தில், அரசியல் மாநாடு நடத்தும் ஒவ்வொரு ஆண்டிலும், அரசியல் மாநாட்டை ஒட்டி அதே பந்தலில் சமுதாய மாநாடும் நடத்திவந்திருக்கிருர்கள் அந்தமுறை சில ஆண்டுகள் தான் கையாளப் பட்டதாகத் தெரியவருகிறது காங்கிரசிலே அங்கம் பெற்றிருந்த வைதிகத் தலைவர்கள் இந்து மதத்தில் சீர்திருத்தம் நடைபெறுவது தம் உயர் வகுப்புச்சலுகைகளுக்குத்தடையாகி விடும் என்று கருதி, சமுதாய மாநாடு நடைபெறுவதை அவர்கள் எதிர்க்க ஆரம்பித்தார்கள். அவர்களே பெரும்பான்மையராக மேலிடத்திலிருந்ததால்; சமுதாய மாநாடு நடத்தும் பழக்கம் அறவே, கைவிடப் பட்டுவிட்டது. அதன் காரணமாக சமுதாய சீர்திருத்த அறிவு வளர அறவே வழியில்லாமல் போயிற்று; அரசியல் அறிவும் அரைகுறையாகவே வளரத் தலைப்பட்டது

வரைகுறை அரசியல் அறிவு பெற்றிருக்கும் வேளையில், உலகச் சூழ்நிலையின் காரணமாக துணைக்கண்டத்திற்குத் தன்னுட்சி முறை ஏற்பட்டது. தன்னுட்சிமுறையைப் பயன்படுத்திக்கொண்டு, சமுதாயத்தில் சீர்திருத்தங்காண டாக்டர் அம்பேத்கார் முயலுகிருர். தோழர் நேரு போன்ற தலைவர்கள் ஆதரவுஇருக்கிறது. என்றாலும், வைதிகபுரியினர் எதிர்க்கின்றனர்! எதிர்க்கும் வைதிகர்கள்-திருத்தப்பட வேண்டியவர்களாவார்கள்' அவர்களைத் திருத்தும் முயற்சி போதுமான அளவுக்கு எடுக்கப்படவில்லை!

தென்னுட்டைப் பொறுத்த வரையில்-குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஆயிரக்கணக்கான அருந் தொண்டர்களைக் கொண்ட பகுத்தறிவியக்கத்தின் இடைவிடா முயற்சியால்: மக்களிடையே சீர்திருத்தஎண்ணம் ஓரளவுக்கு அரும்பியிடுக்க வழியேற்பட்டது 'இந்துச் சட்ட மசோதா' போன்றவைகளையும், 'இந்து மத அறநிலையப் பாதுகாப்புத் திருத்த மசோதா' போன்றவற்றையும், 'இருதாரத் தடை மசோதா' போன்றவைகளையும் பெரும் ஆதரவு காட்டி வரவேற்கத் தகுந்த அளவுக்கு, மக்கள், பகுத்தறிவுப் பிரசாரத்தின் பலனால். உள்ள உரம் பெற்றவர்களாக ஆகியிருக்கிறார்கள். இங்கும் சிறு சிறு சலசலப்பு ஆதிக்க வகுப்பினரானவைதீகபுரியினரிடமிருந்து எழும்பும் என்றாலும், அது நாளடைவில் வலிமைகுன்றிவடுகிறது.தமிழ் நாட்டைப்போன்று, பகுத்தறிவுப் பிரசாரம் வடஇந்தியாவில் ஏற்படாத காரணத்தால், வைதீகபுரியினரின் கூக்குரல்-மத வெறியர்களின் கிளர்ச்சி சற்று அதிகமாகக் காணப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பெரும்பாலான மக்கள், இருபதாம் நூற்றுண்டில் வாழத் தகுந்த அளவில் சமுதாய உள்ளம் படைத்தவர்களாக இல்லை ஆகவே, அத்தகையோரை சமத்துவ வாழ்வுக்கு ஏற்றவகையில் திருத்த. அறிவுப் புரட்சியை உடனடியாக உண்டாக்க அரசாங்கம் முயலல் வேண்டும். அரசாங்கத்தால் இயலாதென்றால், சமுதாய சீர்திருத்த அறிவுப் பிரசாரம் செய்யும் இயக்கத்தாரை யாவது நற்றெண்டு புரியுமாறு இடமளிக்க முற்படவேண்டும். பொருமைக் காய்ச்சலால் அறிவுப் பணிபுரிவோரை அடக்குமுறைச் சட்டங்கொண்டு அடக்க முற்படுகிற பழக்கத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் ஆளவந்தார்கள் கைக்கொள்ள ஆரம்பிப்பாராயின், இந்நாடு நல்வழிப்பட நீண் காலம்பிடிக்கும்,

சமுதாய சீர்திருத்தத்தைப் புறக்கணித்ததன் விளைவால் தான், மக்கள் இன்னமும் சரி-தவறு உணராமல் அறியாமையில் கிடந்து உழல்கிறார்கள். சமுதாயப் **புறக்கணிப்பின் விளைவே**, இன்று டில்லியின் நடத்தப்பெறும் மதவெறியர்களின் வேண்டாக்கிளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும் ஆகவே இனியேனும் சமுதாய சீர்திருத்தப் புரட்சிக் கருத்துக்களை மக்கள்முன் வைக்கவும்-வைக்கவிடவும் ஆளவந்துள்ள அரசாங்கம் தன்னைத் தயாராக்கிக் கொள்ளுமாக!

அவர்களுக்குள்ளேயே 'ரகளை!'

அனைத்திந்திய வானெலி நிலயத்தின் இந்தி கமிட்டியிலிருந்து பாலகிருஷ்ண சர்மா, மௌலி சந்திரசர்மா, வியோகி ஹரி ஆகியோர் ராஜிநாமா செய்துவிட்டனராம் மேற்படி கமிட்டியின் உறுப்பினர்கள் சிலர் கூறிய யோசனைகளை அனைத்திந்திய வானெலி நிலயம் அலட்சியம் செய்ததைக் கண்டிக்கும் வகையிலேதான் இந்த ராஜிநாமாக்களாம்!

கற்பனை உரையாடல்

கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன்]

[உரையாடுவோர் : சுப்பு சாஸ்திரிகள், ரெங்காச்சாரி,
இடம் : திருவல்லிக்கேணி கடற்கரை.
காலம் : மாலை, மணி சுமார் 7]

ரெங்காச்சாரியார் குடும்ப சமேதராய் வருகிறார். அச்சமயம் சுப்பு சாஸ்திரி ரெங்காச்சாரியை சந்திக்கிறார்...

சுப்பு: ஓ! ஸ்வாமி! ஆச்சாரியாள் ரொம்ப நாளா வந்துட்டேள்!

ரங்: ஆமாங்காணும் வேலை என்ன செய்யறது, ஊரிலே இருந்த பெண்டாட்டி இன்னைக்கு வந்திருக்கா; சினிமாவுக்குப் போகணுமின்னு தொந்தரவு பண்ணிணு, லேட் ஆயிடுத்து சினிமாக்கும் போகலைமின்னேன் கேட்க மாட்டேன்னுன், சரி பீச்சுக்காவது போவமின்னு புறப்பட்டோம். உம்...அப்புறம்என்னங்காணும் விசேஷம்? நாளுக்கு வேலையாக என்ன மோட்டாரை பண்ணிண்டிருக்கறவன் போலிருக்கே?

சுப்பு: ஆமாம், அன்னிக்கு செகரட்டேரியட் வரைக்கும் போயிட்டு வர்றேன் சொல்லி வேலைபோனேன்னே, அதுக்காகத்தான் போனேன்.

ரங்: என்ன ஆச்சு!

சுப்: ஆறது என்ன, கொஞ்சம் இழுமதிபாத்தாளிருக்கு....

ரங்: ஏன், மினிஸ்டர்கிட்டே பார்க்கறதுக்கே.

சுப்: அட, அவாளுக்கு மினிஸ்டரைப் பார்த்து பண்ணும்படியாவது. இந்த கலகத்திலே பலரைத்தான் நம்மறது?

சுப்: அவாதான் என்ன செய்வா; எடுத்ததுக்கெல்லாம் அந்த கர்யூனல் ஜீ.ஓ. ன்னு நடக்கறது!

ரங்: ஆமாங்காணும்......... ஆமாம்; இப்பச் சொன்னயளே, அது வாஸ்தவம். எதையெடுத்தாலும் கம்யூனல் பிராப்ளத்திலேன்னு வந்து முடியுது!

சுப்: அதுக்காகத்தான் நம்மவா கொஞ்ச நாளா மகாநாடு, மகாநாடு, அது, இதுன்னு என்னென்னமோ செய்துண்டு வர்ரா... அதிருக்கட்டும், மகாநாட்டுக்கு நீர் வந்திரா ஓய்?

ரங்: எதுக்கு, பிராமண மகாநாட்டுக்குத்தானே?

சுப்: ஆமாம்.

ரங்: ஆ! நீர்தான் மெச்சிக் கொள்ளணும் அந்த மகாநாட்டை. பிராமண மகாநாட்டை அது வெட்கமில்லாமே இவாளுக் பிராமணன்னு சொல்லிண்டு மகாநாடு கூட்ட ஆரம்பிச்சுட்டாங்களே...

சு: ஏங்காணும்......ஏன், அப்படிச் சொல்றீர். உமக்கென்ன அதுமேலே அவ்வளவு கோபம்?

ரங்: பின்னே என்னங்காணும். 'சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்கிற மாதிரி என்னென்னமோ பேசித் தொலைச்சிருக்கா. பிராமண கலப்பு மணம் செய்துகொள்ளணுமாம்; பிராமண பெண்களெல்லாம் இனிமே பரத நாட்டியம் ஆடவேண்டாமாம் உம், இதெல்லாம் என்ன நடக்கிறகாரியமா?... அது மட்டுமில்லே, வேதாக்ஷரத்துக்கு பாலிஷ் செய்யும் நம்ம தர்மத்தைவிட்டு போட்டு குழப்பறான்களே: இல்லே, நான் கேட்கிறேன்; கலப்பு மணம் செய்துகொள்ளணுமின்னு சொல்லுறளே, அப்படி நடக்கிறதா வக்கணைக்கு வேணும்! அப்புறம் பிராமணத் தனம் எங்கேபோறது? வருணாசிரம தர்மமே குலைஞ்சு போயிடுமே! சரி, அதுதான் தொலையட்டும் நம்மபெண்கள்பரதநாட்டியம் ஆடப்படாதாமே, இதென்ன அநியாயம்; நாம் பரதநாட்டியத்திலே இவ்வளவு செளக்கியமா வாழுறதுக்கே அந்த ஆட்டம்தானே காரணம்! பார் ஆத்திலே பரத நாட்டியம் இல்லையிருக்கு? நம்ம பெண்களுக்கு அது ஒரு குவாலிபிகேஷனுகவன்னோ இருக்கு. பாத்துக்கு பெண்பார்க்க வரும் பையன்களெல்லாம், பொண்ணுக்கு டான்சு தெரியுமான்னு கேட்கிறாங்களே! இப்படியிருக்கச்சே. அது கூடாது, இது கூடாதுன்னு பேத்திண்டிருந்தா, அப்புறம் காங்கிரஸ் முறைதான் எப்படின்னு. காலமோ கெட்டுக் கிடக்கு, சூத்ராளெல்லாம் படிக்க ஆரம்பிச்சுட்டான், இந்த சமயத்திலே பிராமணன் அவனோடு உயர்வை அல்லவா காப்பாத்தணும் பார்க்கணும். இல்லாட்டா பஞ்சாங்கத்தை எடுத்துண்டு ஆத்தாத்தையா தேடிண்டு போகணும். முடியுமா இந்த காலத்திலே?"

சு: உம்... போதும், போதும் கிறுக்குப் பிடிச்சகாணும், என்னமோ பிரமாதமாக மகாநாட்டைப் பற்றி பேசஆரம்பிச்சுட்டீரே; உமக்குத் தெரிஞ்சதெல்லாம் மகாநாட்டை கூட்டினவாளுக்குத் தெரியாதுன்னு நெனைச்சுட்டீரா? நம்மவா ஒரு காரியத்தைச்செய்யறதாயிருந்தா அதிலே சம்பந்தம் இல்லாமலா செய்வா! கலப்பு மணம் கூடாது என்கிறது அவாளுக்குத் தெரியாதா? பரத நாட்டியத்தின் பக்குவம், மகிமை இதெல்லாம் அறியாத பிராமணாளா அவா? எல்லாம் தெரிஞ்சுதான் இப்படிப் பேசியிருக்கா. கலப்பு மணம் செய்துகொள்றதன்னு

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

அறிவுக் கதிர்!

கடவுளைப் பற்றித் தவருன எண்ணங்களை மக்களிடையே பரப்புவதைக் காட்டிலும். அத்தகைய கடவுளே இல்லையென்று சொல்லி விடுதலே மேலாகும். கடவுள் இல்லையெனக் கூறுதல் நாஸ்திகக்குற்றத்தின் பாற்படாதோ வென்று கூறுவீர்களேயாயின், கடவுளைப் பற்றித் தவருகக் கற்பனை செய்து காலட்சேபம் பண்ணுவது கடவுள் நிந்தனையாகாதா என்று கேட்கிறேன்.

—பிரான்ஸிஸ் பேக்கன்

"மயிரிழை மெஜாரிட்டியில் மலான் கட்சி நடத்தும் தர்பார்!"

———;0:———

பதவியைப் பறிகொடுக்கும் நாள் கிட்டிவிட்டது!

லண்டன், டிச 13—

'மலான் கட்சியின தொடை நடுங்கிகள் மயிரிழை மெஜாரிட்டியில் அவர்கள் தர்பார் நடைபெறுகிறது. அவர்களுக்கு ஆதரவு மிகமிக குறைந்து வருகிறது. அவர்கள் பதவியிலிருந்து ஒழிந்தால் நீண்டகாலம் மீண்டும் தலை தூக்க முடியாது என்று 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகையின் கேப்டவுன் நிருபர் எழுதுகிறார்.

அவர் எழுதுவதாவது:— நாணயமதிப்பு குறைந்திருந்தும்கூட அவர்களுடைய பொருளாதாரம் மிகவும் சிக்கலடைந்திருக்கிறது. நிதி அநேகமாக காலியாகக் கிடக்கிறது. இவர்கள் 15 ஆண்டு காலமாக இருக்க இடம் தெரியவில்லை. இப்பொழுது பதவி இழந்தால் அதேமாதிரி இருந்த இடம் தெரியாமல் அவர்கள் போவதில் ஆச்சரியமில்லை.

மைகேல் ஸ்காட் மலான் சர்க்காரின் மானத்தை ஐ நா. வில் வாங்கியது 'கருப்பர்நாடுகள்' ஒன்று சேர்ந்து செய்த சூழ்ச்சி என்று மலானும், அவருடைய சகாக்களும், கூறுகின்றனர். அவர்கள் மானம் பறிபோவதற்கு அவர்களுடைய நிறக்கொள்கையும் இதர செயல்களுமேதான காரணம்என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தென்னுப்பிரிக்காவில் நடைபெறும் விஷயங்களும், அவர்கள் செய்யும் கொடுமைகளும் அப்படியே ரிப்போர்ட் செய்யப்பட்டால தென்னுப்பிரிக்க சர்க்காரின்குட்டு வெளிப்பட்டுவிடுமே!

காமன்வெல்த் மாநாட்டில் தென்னுப்பிரிக்காவுக்கு "வராக்குறி"!

லண்டன், டிச. 13—

கொழும்புவில நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டிற்கு, தென்னுப்பிரிக்கா பிரதம மந்திரி டாக்டர் மலான் வருவது சாத்தியமில்லை என்று தெரிகிறது. தன் சகாக்களில் ஒருவரைக்கூட அனுப்ப முடியாத நிலைமையில் அவர் இருக்கிறார்.

கொழும்பு மாநாடு கூடும் சமயத்தில் முக்கியமான பிரச்னைகள், மிகவும் தகராறுள்ள பிரச்னைகள் தென்னுப்பிரிக்க பார்லிமெண்டில் விவாதத்திற்கு வருகிறது. சர்க்காருக்கு மெஜாரிடி பலம துர்ப்பலமாக இருப்பதால் தைரியமாக மலான் அவர் நாட்டைவிட்டு வருவதற்கில்லை.

தென்னுப்பிரிக்க சர்க்காரின செய்தி தணிக்கை கொள்கை, பிரிட்டனில எழுப்பிய கடன் தென்மேற்கு ஆப்பிரிக்கா விஷயத்தில் ஐ. நா. 'தலையீடு' முதலிய விஷயங்கள பார்லிமெண்ட முன்பு வருகின்றனவாம்.

திராவிட முன்னேற்றத் தலைமைக் கழக நிதி உதவிக்காக

தோழர்

C. N. அண்ணாத்துரை M. A.

எழுதிய

"சந்திர மோகன்"

என்ற நாடகம்

விருதுநகர் "சென்ட்ரல்" தியேட்டரில் 26—12—49 திங்கட்கிழமை இரவு நடைபெறும்.

சினிமா நடிகர் K. R. ராமசாமி, அண்ணாதுரை, அவரதுகுழுவினர் ஆகியோர் நடிக்கிறார்கள்.

நாடகத்திற்குத் தலைமைவகிக்க உயர்திரு

W. P. A. சவுந்திரபாண்டியன் அவர்கள்

கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்

கொட்டகையில் சுருக்கமான இடவசதி உண்டு. அந்த அளவுக்கு மட்டும் டிக்கட்டுகள் வழங்கப்படும். வெளியூர் தோழர்கள் தங்களுக்குத் தேவையான டிக்கட்டுகளை தங்கள் கிளைக் கழகங்களின் மூலம் பதிவு செய்துகொள்ள வேண்டும். கழகம் இல்லாத ஊரில உள்ளவர்கள். நேரடியாக பதிவு செய்துகொள்ளலாம். உள்ளூர் தோழர்களும் தங்கள் முகவரிகளை உடனே பதிவு செய்துகொள்வது நலம். தேவையான டிக்கட்டுகள சேர்ந்தவுடன பதிவு செய்வது நிறுத்தப்படும்.

நாடக வசூலில் செலவு போக முழுத் தொகையும் தலைமைக் கழகத்திடம் சேர்ப்பிக்கப்பட்டுவிடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் விருதுநகர் கிளை

ரூர் கம்யூனிஸ்டு தலைவர் விரட்டப்பட்டார்

[illegible], டிச, 14—

ஹங்கேரியில [illegible] கம்யூனிஸ்டுகளுக்கு [illegible] [illegible]. [illegible] மேற்கு ஜெர்மனியிலும் [illegible] [illegible] ஆரம்பமாகிறது. [illegible] கம்யூனிஸ்ட் தலைவர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] உபசாரத்துடன் [illegible] ஆஸ்திரியாவுக்கு [illegible].

——

அனுமதி பெற்று :: :: புகைபிடிக்கவும்!

ரயிலில் செல்லும்போது புகைபிடிக்க விரும்புவோர்; பக்கத்திலிருக்கும் பிரயாணிகளிடம் அனுமதி பெற்றபிறகே பிடிக்க வேண்டுமென்பதாகக் குறிப்பிட்டு தொலைதூரம்செல்லும்வண்டிகளில் அறிவிப்புகள் போடப்பட்டுள்ளன.

கழகத் தோழர்களுக்கு

——

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களில் கலந்து சொற்பொழிவாற்ற இசைவு தந்துள்ள தோழர்களின் முகவரிகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர் அழைத்துக்கொள்ளலாம்.

முகவரிகள் :—

1. பி. என். இராமானுசன், திராவிட முன்னேற்ற மாணவர் கழகம், பொள்ளாச்சி.
2. க. இராமசாமி, கலா நிலையம், விருதுநகர்.
3. அரு. பெரியண்ணன், செந்தமிழ் பதிப்பகம், புதுக்கோட்டை
4. க. ஞானமுத்து, "சிவாஸ்டார்" தெருஇரண்டாவதவீதி, புதுக்கோட்டை.
5. எஸ். ஏ. மாணிக்கம், ஆசிரியர் 'கோவை முரசு' சூலூர் P. O. (கோவை ஜில்லா)
6. மதுரை மன்னன், 'சக்குசாதம்' ஆபீஸ், 166, வடக்குமாசி வீதி, மதுரை.
7. மா. அமிர்தலிங்கம், [illegible] 24, அப்பாஜி பத்தர் வீதி, பண்ணுருட்டி P. O. (தெ. ஆ. மாவட்டம்)
8. வை. சுப்பிரமணியன், 16. கீழ அனுமார்கோவில் தெரு, மதுரை.
9. புலவர். குழந்தையா, [illegible] தெரு, [illegible], [illegible] P. O. (தஞ்சைமாவட்டம்)
10. இரா. கலாமணி, நாடக ஆசிரியர், 135, ஆஸ்பிடல் ரோடு, விழுப்புரம்.
11. ரா. தங்கவேலு, நகர திராவிடமுன்னேற்றக் கழகம், உடுமலைப்பேட்டை

செயலாளர்,

தி. மு. க. பிரசாரக் குழு,

தலைமை நிலையம்.

பாரதி கழக ஆண்டு விழா

——

காட்பாடி பாரதி கழகத்தின் ஆண்டு விழா 17-12-49 அன்று தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனார் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் "காலத்தைக் கேட்கவில்லை" என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

சந்தாதாரர்களுக்கு

——

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரை குறித்து எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"மாலை மணி" [illegible].

விண் முட்டும் புகழ் படைத்த காந்திக்கு சுண்ணாம்புக்கல் 'ஸ்தூபி' போதுமா?

———(o)———

கொள்கைகளைக் காற்றில் விட்டு, சின்னம் நிறுவுவது சிறுமதிதானே!

சென்னை: சென்னையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அடி உயரத்தில் மகாத்மா காந்தி ஸ்தூபி யொன்றை எழுப்பும் திட்டம் நிறைவேற்றத் தக்கு, ரூ. 30,00,000 நிதி திரட்ட நிறுவப்பட்ட கமிட்டியின் தலைவராக இருக்க, சென்னை பிரதமர் தோழர் குமாரசாமி ராஜா சம்மதித்துவிட்டாரென்ற செய்தி திடுக்கிட வைத்துவிட்டது.

பணத்தைப் பெருத்த அளவில் பாழாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது சென்னை சர்க்கார் காந்தியின் பெயருக்கு மரியாதை செய்வதற்கான சரியான வழி, அன்னவரின் போதனைகளைத் தனிப்பட்ட வாழ்விலும் பின்பற்றுவதேயாகும் விண்ணைமுட்டும் புகழ் படைத்த மகாத்மாகாந்திக்கு கல்லாலும் சுண்ணாம்பாலும் நினைவுச்சின்னம் எழுப்பிவிடுவதால் நேர்மையாக நடந்துகொண்டதாய் ஆகிவிடமாட்டோம். நம வாழ்க்கையில் காந்தியின் கொள்கைகளை அவமதித்துவிட்டு, அவருக்கு மட்டும் நினைவு ஸ்தூபியை எழுப்ப முற்படுவது யோக்கியமற்ற செயலாகாதா?

வெவ்வேறு இதர காலங்களில் இதற்கு என்ன நியாயமிருந்தபோதிலுங்கூட, இன்றைய நம் நாட்டின் வருந்தத்தக்கநிலையில், இதுபோன்ற அபரிமித செலவுடன் கூடிய அர்த்தமற்றத் திட்டங்களுக்கு எத்தகைய நியாயமில்லை. செலவிடப்படக்கூடிய ஒவ்வொரு சல்லிக்காசும், புயலின் கொடுமைக்குள்ளான ஆந்திர மக்களின் துயர் துடைக்கப் பயன்பட வேண்டுமென்பதை சென்னை பிரதமர் தெரிந்துகொள்ள வேண்டியவர்! ஸ்தூபிகள் எழுப்புவது போன்ற காரியங்களுக்கு நிதி திரட்டும் முயற்சியை ஊக்குவிக்கும் சர்க்காரைத் தவிர பொறுப்பற்ற நடவடிக்கை அறியாமையினபாற்பட்டதேயாகும். அர்த்தமற்ற, இலாபகரமில்லாத திட்டங்களையொதுக்கி, நாடெங்கும்சிக்கனமுறை மேற்கொள்ளப் பெறவேண்டுமென்ற இந்திய சர்க்காரின் கட்டளையை சென்னை சர்க்கார் கவனித்ததாகவே காணும்.

— 'பிளிட்ஸ்,

ஆந்திர மாகாண நிறுவன ஏற்பாடுகள்

அமையப்போகும் ஆந்திர மாகாண நிர்வாகமுறை அமைப்புகள் பற்றிய தகவல்களை சேகரிக்க பல் வேறு (சர்க்கார்) இலாக்காக்களும் அனுப்பிவைக்கப் படவிருக்கும் 'விளக்கக் தொகுப்பு' வேலை முடிந்துவிட்டதாகவும், அவை இப்போது பல இலாகா அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப் பெற்று வருவதாகவும் தெரிகிறது. உயர் நீதிமன்றம் உள்ளிட்ட பல்வகைப் பிரச்னைகளையும் சென்னைப் பிரதமர் நீதிபதியோடு பேசி முடிவு செய்வாரெனத் தெரிகிறது.

——

மாஸ்கோவின் உத்திரவின் படி பிரெஞ்சுகம்யூனிஸ்டு கட்சியில் பலகை சீகரமேஜ் [illegible] என்று தெரிகிறது. கட்சிக் கொள்கையை தீவிரமாகக் கடைபிடிக்காதவர்கள் உறுதியான மனப்பான்மையில்லாதவர்கள விலக்கப்படுவார்கள்.

—ருஷேர்

ரஷ்யாவில் வெடித்தது அணுக்குண்டல்லவாம்

நாச வேலை செய்யக்கூடிய குண்டு அமெரிக்காவிடம் மட்டுந்தானும்!

பிரிட்டிஷ் பிரமுகர் பிரலாபம்!

லண்டன், டிச. 12.—

செப்டம்பரில் ரஷ்யாவில் வெடித்தது 'ஹைட்ரோஜன்' அணுகுண்டே ஒழிய உரேனியத்தினால் செய்யப்பட்டதல்லவென்று பிரிட்டிஷ் ரசாயனத் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி பாப் எட்வாட்ஸ் கூறுகிறார். ரஷ்யாவில் போதிய உரேனியம் இல்லை என்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் அணுக் குண்டுகள் செய்யும்முறையில் குண்டுகளைத்தயாரிக்க தக்க வல்லுநர்கள் ரஷ்யாவில் இல்லை என்றும், போதிய ஆதாரத்துடனேயே இம்மாதிரி கூறுவதாகவும் அவர் கூறுகிறார்.

ரஷ்யாவில் வெடித்தது மிகவும் பெரிய அளவில்தான் இருந்தது என்றாலும், இதில் 'ரேடியோ ஆக்டிவ்' அம்சங்கள் இல்லை என்றும், இத்தகைய குண்டுகளைக்கொண்டு நாச வேலை ப்பிரமாதமாக செய்துவிட முடியாதென்றும் அவர் கூறுகிறார்.

அறிக்கை

——

தஞ்சைமாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்களுக்கு:— எனனிடமிருந்து அங்கத்தின சேர்க்கும் ரசீது புத்தகம் பெற்றுக் கொண்ட தோழர்கள் தயவுசெய்து அங்கத்தினர் சேர்த்து மத்திய மாவட்ட கழகாசிரமங்களையும், அவைகளுக்கு சேரவேண்டிய பணத்தையும் 31-12-49-க்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மாவட்ட கழகம் நிறுவ ஜனவரி மாதத்தில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியதிருப்பதால் காலதாமதமில்லாமல் ஆவன செய்யுங்கள்.

கே. கே. நீலமேகம்

அமைப்பாளர்

10—12—49.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

திண்டிவனம், டிச. 10—

5-12-49 அன்று திண்டிவனம் கண்டிராக்ட் ஆபீஸ்க்கு எதிரில் மக்கள் திரண்டு திண்டிவனம் பத்மா டாக்கீஸ் மைதானத்தில் கூடினர். மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்ட பந்தலில், பொதுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வெளியூர், உள்ளூர்த் தோழர்கள் 3 மணியிலிருந்தே திரள் திரளாக வர ஆரம்பித்தனர் சுமார் 5000-க்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர்.

தோழர்கள் அண்ணாத்துரை, ஈ. வெ. கி. சம்பத், பெத்தாம் பாளையம் பழனிச்சாமி முதலியவர்கள் சரியாக 7 மணிக்குப் பந்தலை வந்தடைந்தனர்.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி தோழர் தங்கவேலு அவர்கள் முன்மொழிய தோழர் பாண்டுரங்கன் அவர்கள் வழிமொழிய தோழர் பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்து தி. மு. கழகத்தைப் பற்றியும், அதன் அவசியத்தைப்பற்றியும் சுருக்கமாக பேசினார்.

ஈ. வெ. கி. சம்பத்

பிறகு தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள்—தி. மு கழகம் ஏற்படக் காரணம் பற்றி விளக்கினார். அவர் மேலும் தற்கால அரசியலில் காங்கிரஸ் மந்திரிகள் செய்யும் கொடுங்கோல் ஆட்சி முறையை விளக்கிப் பேசுகையில், சென்னையில் உள்ள 'ஐலண்டு மைதானத்தில்'' (Island Ground) எதிர்க் கட்சிக்காரர்கள் கூட்டங்கள் போட ஏதுவாயிருப்பதனால் அதைத் தடுக்க வேறு வழியில்லையாகையால் 'Growmore Food Campaign' மூலமாக அம்மைதானத்தைச் சுற்றி வேலிகட்டி, சோளம் பயிரிடும் முறையை விளக்கி அது எவ்வளவு பிற்போக்கான வழி என்பதையும் விளக்கிப் பேசினார்கள்.

அண்ணாத்துரை

சரியாக 7-30 மணிக்கு நீண்ட கைதட்டலுக்கிடையே, தோழர் அண்ணாதுரை அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் பேசுகையில், தி. கழகத்திற்கு 'விடுதலை' பத்திரிகையிருப்பது போல'' தி. மு. கழகத்திற்கு ''மாலை மணி'' பத்திரிகை உண்டெனவும், தி கழகத்தின் பேராலோ, தி. மு. கழகத்தின் பேராலோ, சு. ம. கழகத்தின் பேராலோ, பேசுவார்கள் எல்லாம் ஒரு கொள்கையைப் பற்றியதே எனவும்—அழுக்கைப் போக்கும் சோப், பல பெயர்களைக்கொண்டு (501-Lux போல) உள்ளது போல என் விளக்கினார் ''ஒரே குறிக்கோளுக்காக உபயோகப் படுத்தியிருந்த (கூட்டத்தில்) இரு ஒலி பெருக்கிகளைப்போல றவைகளே, ''தி மு கழ முமை, தி. கழகமும்'' என்று கூறினார், தி.மு. கழகம் என ஒன்று புதிதாக ஏற்பட்டதைக்கண்ட காங்கிரஸ் மந்திரிகள் வலை வீசுவதாகவும், அவ்வலைகளில் சிக்க மாட்டோம் என்றும் பேசினார்

''திருடன் ஒருவன் வீட்டில் திருடப்போய் மறையும் போது டார்ச்லைட் வைத்திருக்கும் ஒருவன் வெளிச்சத்தினால் திருடனைக் கண்டுபிடிக்கும்போது டார்ச்லைட் வைத்திருப்பவன் பேரில் திருடனுக்கு கோபம் தானே வரும். அதுபோல, எங்களைக் கண்டு காங்கிரஸ் மந்திரிகளுக்குக் கோபம் தானே வரும். தூண்டிவிடாத கார்த்திகை அகல் விளக்கு எரிவதில்லை அவ்விளக்கு, முருகன் அருளால் தானாகவும் எரிவதில்லை. அதைத் தூண்டிவிட ஒரு ஆள் தேவையாய் இருப்பதுபோல, தற்கால அரசியலில், காங்கிரஸ் மந்திரிகளுக்கு நம் கழகம் ஒரு தூண்டுகோலே தவிர வேறில்லை. கிணறு வெட்டப் போகும் ஒரு இடம். மற்றொருவன் ''கிணறு வெட்டுவது நல்லதுதான். ஆனால், இந்த இடத்தைவிட்டு வேறு இடத்தில் வெட்டினால் தண்ணீர் நன்றாக இருக்கும்' எனச் சொல்வதைக் கேளாமல், அதே இடத்தில் கிணறு வெட்டி, தண்ணீர் குடிக்கும்போது 'தண்ணீர் உப்பாக இருக்கிறது என்று சொன்னால்'', நீ வெட்டி இருந்தாலல்லவோ உனக்குத் தெரியும் அதன் அருமை நீ ஒரு கை மண்கூட எடுத்துப் போட்டவனல்ல'' என, அவனே நில் கிணறு வெட்டினவன் கோபிப்பது போல், காங்கிரஸ் மந்திரிகள் நம் மீது சீறிவிழுகிறார்கள் கிணறு வெட்டியது நல்ல காரியம்தான். ஆனால் தண்ணீர் தான் உப்பாக இருக்கிறது ஆகவே, தி. மு. கழகம், மாட்டுக்குள் எழுக்கச்சயிறுபோல, மோட்டார் காருக்குள்ள ப்ரேக் (Brake) போல; மந்திரிகள் செய்யும் காரியங்களில் உள்ள பிழைகளை எடுத்துச் சொல்ல ஒரு கழகம் அவசியம் தான்.''

மேலும் அவர் நேரு அவர்கள் அமெரிக்கா சென்று, அமெரிக்காவிடம் இந்தியாவுக்காக கோதுமை கேட்டு, இல்லை யென்ற பதிலுடன் இந்தியா திரும்பியதைப்பற்றியும், அந்த 'இல்லை' யென்ற பதிலின் காரணத்தை பற்றியும் விளக்கிப் பேசினார். தற்காலத்தில் எல்லா விஷயங்களிலும் சென்னை சர்க்கார் பிற்போக்கான நிலையில் இருப்பதற்குக் காரணம், எல்லா அதிகாரங்களையும், பெருவாரியான முக்கியமான வரிகளையும் மத்திய சர்க்காரிடம் கொடுத்ததுதான் காரணம் என விளக்கிப் பேசுகையில், மழையின் காரணமாக கூட்டம் கலைந்தது. ஆர்வத்துடன் அண்ணாவின் பேச்சைக் கேட்க விரும்பிய மக்கள் மேலும் பல விஷயங்களைப் பற்றிக் கேட்க முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் மக்கள் கலைந்தனர்.

தோழர் தங்கவேலு அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

வால்பாறை

வால்பாறை, டிச. 8—

இவ்வூர் இங்கிலீஷ்கிளப்பையடுத்த சால்பங்காட்டு மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அது சமயம் கல்லோணி, சிறுகுன்றுச் சைமலை வெள்ளமலை, நல்லகத்து, நல்லதண்ணீர், சின்கோனா, ஐயர்பாடி முதலிய எஸ்டேட்டுத் தோட்டங்களிலிருந்து நிறைய மக்கள் வந்து கூடியிருந்தார்கள். அதுபோது தோழர் எஸ். வி. ஈ. வின்சென் அவர்கள், திராவிட நாட்டுப் படத்தை திறந்து வைத்துப் பேசினார். தோழர் பீர் முகம்மது அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த நோக்கத்தைப்பற்றி விரிவாகப் பேசினார். (வி-உ)

தேனி

தேனி, டிச. 10—

7-12-49 இரவு 7-30 மணிக்கு தேவாரம் திடலில், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் ஆ. கருப்பையா முன்மொழிய, தோழர் தேவராசன் வழிமொழிய, தோழர் சோ. பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில், தற்கால அரசியல் நிலை பற்றி விரிவாகவும், அழகாகவும் பேசினார்.

நாடார்சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி மாணவன், தோழர் பால்அரசு, மாணவர்கள் தி.மு. கழகத்தில் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பது பற்றி பேசினார். மதுரை அ. சுப்பிரமணியம் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளைப்பற்றிப் பேசினார். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

தாராசுரம்

தாராசுரம், டிச. 5—

இவ்வூர், திராவிட முன்னேற்றக் கழகம், 4-12-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பெத்தாம்பாளையம் எஸ். பழனிச்சாமி அவர்கள் கொடியேற்றுவித்தார்கள்.

அதுபோது நடந்த பொதுக் கூட்டத்திற்கு, தாராசுரம் பஞ்சாயத்துபோர்டு தலைவர் தோழர் கே. ஜி. இருப்பவகடம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வெ. கே. சம்பத், கே. கே. நீலமேகம் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் செயலாளர் தோழர் ஜி ராமதுரையும் அவர்கள் எல்லோருக்கும் நன்றிகூற, கூட்டம் 6-மணிக்கு முடிவுற்றது.

இவ்விழா சிறப்பாக நடப்பதற்கு முக்கிய பங்கு எடுத்துக் கொண்டு சகல உதவியும் செய்த தோழர் வி. சமபந்தம் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவரானார். (வி. உ)

மின்சார உற்பத்தித் திட்டம்

சென்னை மாகாணத்தில் மின்சார சக்தி உற்பத்திக்கென ஐந்தாண்டுத் திட்டமொன்றை சர்க்கார் மேற்கொண்டு வருவதாக விவசாய மந்திரி தோழர் ஏ. பி. ஷெட்டி டிச. 11-ல் கோவையில் நடந்த மாவட்ட விவசாய மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வலது சாரிகளுக்குப் புது வாழ்வு!

ஆஸ்திரேலிய பொதுத் தேர்தல் முடிவு

ஆஸ்திரேலிய தேர்தலில் தொழிற்கட்சி தோற்றது 8 வருஷம் பதவியிலிருந்த சோஷலிஸ்டு சர்க்கார் ஆட்சி முடிந்தது.

இனை பத்திரிகைச் செய்தி அப்புறன் உலகம்சமதர்மத்தை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்நாளில் ஆஸ்திரேலியாவில் 8 ஆண்டுகள் ஆட்சி நடத்திய ஒரு சமதர்மக் கட்சி தேர்தலில் வீழ்ச்சியுற்று, ஆட்சிப் பீடத்தை வலது சாரிகள் கைப்பற்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற செய்தி, மிக வருந்தத் தக்கது, அதிலும் இந்நாட்டுக்கேனிச் சோதனை ஒரு பெரிய நிலப்பகுதி. பிற்போக்காளர் ஆட்சியில் வருவது இந்நாட்டுக்கே ஆபத்துக்குமே ஓர் அபாய அறிவிப்பாகும்.

வெள்ளையர் எங்கிருந்தபோதிலும் அங்கு முதலாளிகள் ஆட்சி தான் ஏற்படும், பண முதலைகளின் ஏகாதிபத்தியம் தான் நிலை கொள்ளும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இங்கிலாந்து பிரிட்டனில் நடப்பது தொழிற் கட்சி ஆட்சி என்று சொல்லப்படுகிறதே தவிர, உண்மையை ஆராய்ந்து பார்க்கின்றபோது, அங்கு நடைமுறையில் பண முதலைகளின் ஆதிக்கம்தான் நிலவுகிறது. இரஷியாவை எதிர்க்கும் விஷயத்தில் அமெரிக்காவும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியும் ஒத்துழைப்பதிலிருந்து இவ்வுண்மையை விளக்குவதாகும் இங்கிலாந்தில், அடுத்த ஆண்டில் பிரிட்டனிலும் தேர்தல் நடைபெறுமென்று தெரிகிறது. அந்தத் தோல்வி ஆஸ்திரேலியாவுக்கு நேர்ந்ததுபோலவே இங்கிலாந்துக்கும் நேருமானால், அது கண்டு யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை

இதனை ஏன் வலியுறுத்திக் கூறுகின்றோமெனில், காமன்வெல்த் நாடுகளுடன் உறவு கொள்ளும் முறையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஏகாதிபத்திய நாடுகளுடன் ஒட்டிக் கொள்ளும் உலகுமுறை இந்தியா. எனவே இந்திய ஆசியாவின் இதர சரிகள் ஆட்சிப்பீடம் ஏற முடிவதில்லை. இதனை இங்குள்ள சரிகள் மனதில் பதிக்கொள்ள வேண்டும். திராவிடத்தைப் பொறுத்தவரையில் இங்கு ஏற்படும் சமதர்மமான ஒருமுறை எத்தகைய ஆட்சி முறையும் இன் இடம்பெறக்கூடாது என பதே திராவிடரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

நாகரிக நகரில்...!

சென்னை நகரில் 15 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். ஆனால் இங்கு குடிசைகள் உட்பட 1 04 000 கட்டிடங்கள் தான் இருக்கின்றன.

—டாக்டர் பி. வி. செரியன்
சென்னை மேயர்

---

15 புதிய பள்ளிகள் திறக்கப்படும்

சென்னை நகராண்மைக் கழகத்தின் 1950-51-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

சென்னை நகராண்மைக் கழகத்தின் 1950-51-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தை, நகராண்மைக் கழக கமிஷனர் தயாரித்து விட்டார். அத்திட்டம் விரைவில் நகராண்மைக் கழகக் கூட்டத்தில் வெளியிடப்படும்.

இந்த வரவு செலவுத் திட்டப்படி மொத்த வருமானம் ரூ. 25,46,869 எதிர்பார்க்கப்படுகிறது. செலவு ரூ. 28,04,640 ஆண்டு இறுதி வரவு மிகை ரூ. 2,57,771 கடந்த 1949-50 ஆண்டு இறுதியின் மிகுந்த தொகை ரூ. 1,01,040 இதுடன் சேர்க்கப்பட்டுள்ளது. வரவு செலவு திட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பிரிவுகளின்படி 15 புதிய பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும். இவை முக்கியமாக சேரிப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. இதற்கென ரூ. 40,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பெரிய வேலைத் திட்டங்களுக்கு ரூ. 8,29,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய பள்ளிக்கூடங்கள் கட்டவும், சில பள்ளிக்கூடங்களில் இட வசதியை அதிகப்படுத்தவும் இந்தப்பணத்தில் ஒரு பகுதி உபயோகப்படுத்தப்படும்.

அணுக்குண்டு நாட்டிலும் 'அடிமுட்டாள்தனம்'!

நியூயார்க், டிச. 10—

நியூயார்க்கில் மிகக் கடும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது: இதை எப்படியாவது ஒழிக்க நகரவாசிகள் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். இதற்காக என்ன செய்வது என்று வட அமெரிக்க ஆதிவாசிகளை அவர்கள் கேட்டிருக்கிறார்களாம்.

ஒரு கிராமத்தில் வசிப்பவர்கள் பாபம் செய்துவிட்டதினாலேயே மழை பெய்ய வில்லை என்று ஆதிவாசிகள் கூறினார்களாம்!

வருணனை திருப்தி செய்து மழை தருவிக்க தங்களால் முடியும் என்று அவர்கள் தெரிவித்து, அதற்கு உதவுவதாகவும் வாக்களித்திருக்கிறார்களாம்! இது சம்பந்தமான யாகத்திற்கு தேவையான உபகரணங்களை அவர்கள் நியூயார்க்கிற்கு அனுப்பிவருகின்றனர்.

—குளோப்.

கழக நடவடிக்கைகள்

வில்லிவாக்கம், டிச. 12—

சென்னை—வில்லிவாக்கம் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம், 11-12-49 மாலை 7 மணிக்கு, ஒக்கையானத் தெரு, 12 வது எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ப. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் கூடியபோது, கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

1. மேற்படி கழகத்தின் துவக்க விழாவினை, பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரை அவர்களைக் கொண்டு 22-1-50-ல் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. (வி-உ)

* * *

பொம்பூர்:- இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 23-11-49-ல் நடைபெற்றது. அதுபோது, டிசம்பர் இறுதியில் கழகத் துவக்க விழா நடத்துவதென்றும், அதற்கென ஒரு குழு அமைப்பதென்றும் உடனடியாக் கழக அங்கத்தினர்களுக்கு சொற்பொழிவு பயிற்சி அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (செ-ர்)

* * *

கல்லிடைக்குறிச்சி:-16-11-49-ல் இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எ. சோமசுந்தரம், கே. எஸ். சுப்பிரமணியன் ஆகியோர் நெல்லை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

* * *

கடையநல்லூர்:-இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 25-11-49-ல் தோழர் சி. செல்லையா அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது செயலாளர் தோழர் கி. சண்முகம் மீது செயற்குழுவினர் நம்பிக்கையிழந்து விட்டதனால் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கீழ்க்கண்டபடி செயற்குழு திருத்தியமைக்கப்பட்டது.

செயலாளர்:- இரா. பழனிச்சாமி துணைச்செயலாளர்; கே. எஸ். முகம்மது இஸ்மாயில்; நிதி உறுப்பினர்: சி. நடராசன்; விளம்பர உறுப்பினர்: ஆ. திராவிடமணி ஏனைய செயற்குழுவினர்:— சி. செல்லையா, அ. ப. தமிழ்ப்பித்தன் இரா. தமிழரசு, எஸ். குர். சகலநாதன், மம்மதலி, செ. செல்லையா, எஸ். விச்சக்கனி.

மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் சி. செல்லையா, அ. ப. தமிழ்ப்பித்தன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (செ-ர)

• • •

தெம்மாம்:—இக்கர் கிளையின் செயற்குழுக்கூட்டம் 27-11-49-ல் தோழர் எஸ். பழனி அவர்கள் தலைமையில் கூடியது அதுபோது, துவக்க விழா வரவு செலவு கணக்கினை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு வெளியூர் செல்ல நேர்ந்த தோழர் மகபூப் அவர்களின் "இராஜீநாமா" ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோழர்கள் இரா. பாலகுரு ஜி. வி. கோபால் ஆகிய இருவரும் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தெ. ஆ. மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாக தோழர்கள் மு. க. சுந்தரம், ப. து. இரங்கசாமி ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

* * *

குளூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 27-11-49 ல் கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையிலும், தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்டவாறு செயற்குழு திருத்தியமைக்கப்பெற்றது.

செயலாளர்கள்:— எஸ். கே. கருப்பண்ணன்; துணைச் செயலாளர்கள்:-எஸ். கே. கருப்பண்ணன், (அழகப்பன்) எஸ். ஏ. ராச்சிமுத்து பொருள் உறுப்பினர்: எம். ஆர். ராச்சிமுத்து; விளம்பர உறுப்பினர்:—எஸ். கே. சண்முகசுந்தரம் எஸ். ஏ. மாணிக்கம். ஏனைய செயற்குழுவினர்:— எஸ். ஏ. சின்னையா, எஸ். பி. முத்துசாமி, எஸ். பி. ரங்கசாமி, வி. என். ஏ. ராஜு எஸ். கே. சீனிவாசன், ஆர். எஸ். மாணிக்கம், எஸ். டி. பாலசுப்பிரமணியம் மருதாசலம், எஸ். எம். ராமப்பன், எஸ். ஆர். ரங்கசாமி

பின்பு கோவை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் எஸ். கே. கருப்பண்ணன், எஸ். கே. கருப்பண்ணன் (அழகப்பன்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இரு கழகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டது. (வி. உ)

• • •

திருப்பத்தூர் (வ. ஆ):—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 27-11-49-ல் நடைபெற்றது. அதுபோது வேலூர் பெரியார் கூட்டத்தில் கலவரம் விளைவித்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் செய்கையைக் கண்டிக்கத்தக்கது என அறிக்கை விடுத்த பொதுச் செயலாளர் அவர்களைப் பாராட்டியும் இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (வி. உ)

* * *

சென்னை பெரம்பூர்:—இவ்வூர் கிளையின் சார்பில் 27-12-49-ல் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் மதிவாணன் தலைமையில் "பயிற்சி முறை" என்னும் பொருள் பற்றி பலர் விவாதித்தனர். (வி-உ)

* * *

செங்கரைநல்லூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 25-11-49-ல் கூடியது. அதுபோது பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்ப்பது என்றும், சுற்றவட்டாரத்திலுள்ள ஊர்களில் கழகப் பிரதிநிதிகளைக் கொண்டு கூட்டங்கள் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (வி. உ)

• • •

ஆத்தூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 27-11-49-ல் நடைபெற்றது. அதுபொழுது கழகத் துவக்க விழாவின் வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தோழர்கள் மணிவண்ணன், ...

இனி நடப்பவை

சென்னை:-திருவட்டீஸ்வரன்பேட்டை தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் 15—12—49 வியாழன் இரவு 8-30 மணிக்கு அமீர்ட்டன் வரவதி சாலையிலுள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது வரவு செலவு கணக்கு பார்க்கப்படுவதோடு, மாவட்டக் கழகத் தேர்தல் பற்றி யோசிப்பதும். உறுப்பினர்களனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

திருவாரூர்:—இக்கர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம், 22—12—49 வியாழன் மாலை 3-30 மணிக்கு சகுந்தலா அச்சகத்தின் மேல்மாடியில் நடைபெறும். அதுபோது பல முக்கிய ஆக்க வேலைகள் பற்றி ஆலோசிக்க இருப்பதால் செயற்குழுவினர்களனைவரும் தவறாது வருகை தரும்படி வேண்டப்படுகிறார்கள்.

இரா. சீனிவாசன், மோகனம், ஆர். நடராசன், த. பொன்னம்பலம், பாலகிருஷ்ணன், எஸ் ராஜன், த. துரை, கோவிந்தராசு ஆகியோர் கல்லூரி வரவேற்புக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மேட்டூர் அணை—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 27-11-49-ல் தோழர் அ. சுப்பிரமணியம் தலைமையில் கூடியது. அது சமயம், கழகத் துவக்க விழாவை ஜனவரியில் நடத்துவதென்றும், ஜலகண்டபுரம் சுயமரியாதைத் தொண்டர் அ. மு. அர்த்தநாரி அவர்கள் இயற்கை யெய்தியமைக்கு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி உ)

* * *

மாயவரம்:—இக்கர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 27-11-49-ல் கழகக் கட்டிடத்தில் கூடியது. தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதுபோது ஜனவரி மாதத்தில் நடக்க இருக்கும் நாடகங்களை வெற்றிகரமாக நடத்துவதோடு மாயவரத்திலும் ஓர் நாடகம் நடத்தித் தரும்படியாய் பொதுச் செயலாளரை வேண்டியும், இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

மேலைக்குத்தண்டார் கோட்டை:- 21-11-49-ல் இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது கழகத் துவக்க விழா நடத்துவது பற்றியும், அதிக உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்பு தோழர்கள் எஸ். காளிமுத்து, எம். மாணிக்கம் ஆகியோர் மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் ஆர். முருகேசன் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். (வி-உ)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

15—12—49

தர்மபுரி :—	சி. என். அண்ணாத்துரை, ஏ. சித்தையன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஜி. பி. சோமசுந்தரம்
பாவூர் சத்திரம் :—	எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், கே. வி. கே. சாமி, வெள்ளைச்சாமி.

17—12—49

காவேரிப்பாக்கம் :—	இரா. நெடுஞ்செழியன், வி. முனுசாமி.

போகிற போக்கில்...!

"பொதுத் தேர்தலில் போட்டியிடுவார்களா: ஹிந்து மகாசபையினர் பூச்சாண்டி."

—செய்தித் தலைப்பு

காங்கிரஸ் 'பெரியவர்கள்' இந்தப் பூச்சாண்டிக்கா பயந்து விடப்போகிறார்கள்!

* * *

"வேலைக்குப்போய் சம்பாதிக்க வேண்டும், அல்லது பாண்டித்யம் பெறவேண்டும் என்றால் ஒழிய, பெண்களுக்கு காலேஜ் படிப்பு அவசியமானதல்ல"

—பிரசம நீதிபதி ராஜமன்னார்

இவை இரண்டும் வேண்டாமென்றால், ஆண்களுக்கு மட்டும் காலேஜ் படிப்பு எதற்கென்கிறார் நியாயம் தெரியாத நண்பரொருவர்!

* * *

"ஜி. டி. நாயுடுவின் சேவைகளை நாட்டின் நன்மைக்காக உபயோகப் படுத்திக்கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கதாம்"

சி. பி. ராமசாமி ஐயர்

ஐயா! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள் சாமிகளே!

* * *

"போரில் நாசமடைந்த பெர்லின் மிருகக்காட்சி சாலைக்கு, ஒரு யானை அனுப்புமாறு நேருவிடம் கேட்டுக் கொள்ள, மேற்கு பெர்லின் பள்ளிச் சிறுவர்கள் பார்லிமெண்ட் முடிவு செய்கிறார்கிறது"

—செய்தி

நேருவுக்குக் குழந்தைகள் மேல் ஆசை; குழந்தைகளுக்கு யானைகள்மேல் ஆசை! வெளிநாடுகளுக்கு யானை அனுப்புந் தனி இலாகாவென்றினைத் தனி மந்திரி யொருவரின்மேற் பார்வையில் நிறுவி விட்டால் கூட நல்லதென்று விஷயமறிந்தவட்டாரங்களில் பேச்சு உலவுவதாகக் கேள்வி!

* * *

"நல்லமார்க்குகள் வாங்கியும், திறமையுடையவராக இருந்தும் பிராமணன் என்ற காரணத்தில் கல்வி ஸ்தாபனத்தில் பிராமண வாலிபர்களுக்கு அனுமதி மறுக்கும் பட்சத்தில், அந்தக் கல்வி ஸ்தாபனத்தை மறியல் செய்து பகிஷ்கரிக்க நடவடிக்கை யெடுக்கவேண்டுமென முற்போக்கு பிராமணர் மாநாடு தீர்மானித்தது"

—செய்தி

இம் மறியலை பிராமண மாணவர்களே செய்வதா, அன்றி குதிரை பசங்களைப் பிடித்து நிறுத்தி செய்வதா—எது நல்லதும் லாபகரமானதுமாகுமென்பது பற்றி சங்கராச்சாரியார் தலைமையில் சாஸ்திரிகள் கூடி முடிவு செய்வரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது!

• • •

"பருவ மழை தவறியதால் பயிர்ச் சேதம்: சர்க்கார் விவரம் கேட்கின்றனர்"

—செய்தித் தலைப்பு

யாரை? வருண பகவானையா?

• • •

"பொருளாதார இன்னல்களைக் கடந்துவிட்டோம்"

—நிதி மந்திரி மத்தாய்

ஆசியல் இன்னல்களை மன்புகடந்தோம்! இப்போது பொருளாதார இன்னல்களைக் கடந்துவிட்டோம். இன்னும் பத்து நாள் பொறுக்கட்டும், யாராவது ஒரு மந்திரி (சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்தால், யார் பெயர் விழுகிறதோ, அவர்) 'சமூக இன்னல்களையும் கடந்து விட்டோம்' என்று பிரகடனம் செய்து விடுவாரேதானாகில், சுதந்திர சுவர்க்க (பூலோக கைலாய) இந்தியா ஆகிவிடுந்தா. என்ன, நம் பாரத புண்ய பூமி!

* * *

"ஒரு மணியில் இரண்டு சிட்டம் நூல் நூற்கக்கூடிய புதிய ராட்டை யொன்று, நெல்லை ஜில்லாவில் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது."

—செய்தி

சர்வ தேச விஞ்ஞானிகள் சங்கத்துக்கு உடனே தகவல் கொடுத்து விடுவது நல்லது. அது மட்டும் போதாது, அணுசக்தி இரகசியம் போல், இத்தயாரிப்பு முறை இரகசியமும் யாருக்கும் தெரியக்கூடாதவகையில், ஐ. நா.-வில் இந்தியப் பிரதிநிதியாயிருக்கும் நம்ம ராவை ஆகாரத் தோடு எடுத்து வாதாடச் சொல்ல வேண்டியதும் அவசியம்!

கழக உதவி நிதிக்கு நாடகங்கள்

நற்றமிழ் நடிக மன்றத்தாரின் நற்றொண்டு

விருதுநகர், டிச. 14—

விருதை நற்றமிழ் நடிக மன்றத்தார், தி. மு. கழக நிதிக்காக அழைக்கப்படும் இடங்களுக்குச் சென்று நாடகம் நடத்தித்தர விரும்புகிறார்கள். இயக்கவளர்ச்சிக்குரிய சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த கீழ்கண்ட "புது உலகம்" "வீரன் கட்டபொம்மு" "காதல்?" "எங்கும் எதிர்ப்பு" ஆகிய நாடகங்களை நல்ல முறையில் பயிற்சி பெற்று, நடிக்கத் தயாராயுள்ளனர். விவரங்களுக்கு உ. என். இராசன், தலைவர் நற்றமிழ் நடிக மன்றம், செல்வ விலாஸ், விருதுநகர். என்ற முகவரிக்கு எழுதுமாறு தோழர் விருதை. ந. இராமசாமி எழுதுகிறார்.

கண்டதும்...

— [2-ம் பக்கத் தொடர்ச்சி] —

நீ என்ன நினைச்சே, அந்த சு. ம. கார சொல்லு போலேன்னும் பார்த்தியளா? சேச்சே! அப்படியில்லேங்காணும் சமீபமே ருக்மிணி ராமானுஜர்னோட ஐயர் பிள்ளை ஐயங்கார் என்கிற முறையிலே தான் கலப்பு மணம். அப்படியிலே மெருக்க்ளோட சம்பந்தம் பண்ணிவச்சிருந்தாலும் அதிலும் லாப நஷ்டக் கணக்கும் பார்த்துதான் செய்வா. சதாசிவம் குஞ்சம்மையைத்தான் மேரேஜ் பண்ணிண்டார், நம்ம ராதையாய் அந்தக் கவுண்டனை கல்யாணம் பண்ணிண்டா. ருக்மணி அருண்டேலை மேரேஜ் பண்ணிண்டா, இதனாலே யெல்லாம் என்ன நம்ம குடியா முழுகிப் போச்சு? அத்தனையும் லாபங்காணும், லாபம்! அது போலதான் பரத நாட்டியம் ஆடப்படாதுன்னு சொல்றதும். ஆனால் உமையைவிட அவா ஜாஸ்தி நாட்டியக் கலையின் அருமையை நன்னா தெரிஞ்சு வச்சிண்டிருக்கா. ஏராளமா அதை ஒரு கலையின்னு சொல்லி பின், அவா அதை நம்மவாளுக்குக் கிடைத்திருக்கும் ஒரு பெரிய வரம் பிரசாதமின்னு நினைச்சண்டிருக்கா. நீர் எனக்கு காணும் சத்தப் வைத்தியக்காரராய் இருக்கீர். பரத நாட்டியம் கலை பல கலைகளுக்கும், அது வொரு அருமையான கலை!

ரா: ஓஹோ! இதெல்லாம் உம்முடைய ஓபினியனே?

சுப்: நம்மவா ஓபினியன்னு சொல்லும். ஓய், இவ்வளவு பேச்சு ஏன், சுருக்கமாச் சொல்லிவிடறேன்: இந்த மகாராஜ பிரபுக்கு மகாநாடல்ல. இது ஒரு பொலிட்டிகல் கான்பரன்ஸ். அந்த ஈ. வெ. ரா.-வுக்குப் போட்டியா கம்பீஸ்லே பிருந்த பேசறதுன்னு முடிவு ஆம். காலம் இனி பேர் கெட்டுப் போகுமே. அதுக்காக இப்படி ஒரு சனி வினைப்பாம் அரேஞ் பண்ணியிருக்கா, அவ்வளவுதானே வொழிய பிராமண தர்மமாவது மண்ணாங்கட்டியாவது!

ரா: அதிருக்கட்டும் ஓய் விஷயம் கேட்கமறந்துட்டேனே அந்த பசுபதி ஐயர் பேச்சே சம்பிரமாதத்தைப் பத்தி மாதமா செஞ்சு துக்கட்டிருக்காரே! அன்னைத்தலைக்கு சவால் விட்டிருக்காரே!

சுப்: உப், சவ லாவது மண்ணாங்கட்டியாவது. சும்மா வளைமொத்தி வேலை அன்னாத்தலைகடையே சவாலுக்கு அழைச்சோமின்னு ஒருபேரு இருக்கும் பாருங்கோ, அதுக்காக இந்த பேச்சு. இவனாவது அவனோடு பேசி ஜெயிக்கிறதாவது. அவன்னே ஒரு பள்ளிக்கூடத்தப் பையனோட பேசமுடியுமா இந்த பசுபதி ஐயர்? கம்ப ராமாயண விஷயமா அவா பண்டிதாளோடு பேசி அவா வைப்புல்லும் போகச்சே, நம்ம கதி என்னாகும்?

ரா: பின்னே ஏன் அப்படி பேசியிருக்கார்.

சுப்: எல்லாம் ஒரு 'ஸ்டண்ட்' அவ்வளவுதான்! சரி, அதுகிடக்கட்டும். ஆத்திலே எல்லாம் சவுக்கியம்தானே.

ரா: ஆகா, எல்லாம் சவுக்கியமா யிருக்கா.

சுப்: (பக்கத்திலிருக்கும் பையனைப் பார்த்து) இது யாரு?

ரா: அவன்தான் என் பிள்ளை.

சுப்: குழந்தை வாசிக்கிறானா?

ரா: ஆமாம்; இன்ட்டர் வாசிக்கிறான்; பரத நாட்டியமும் கத்துண்டு வரான்.

சுப்: ஓஹோ, அப்படியா! சமத்துதான்; பரத நாட்டியத்திலே எதுவரைக்கும் வந்திருக்கான்?

ரா: ஐஸ்வரம்; வந்திருக்கா.

சுப்: சந்தோஷம், நான் போயிட்டு வரேன். ஒரு நாளைக்கு ஆத்துக்கு வாங்கோளேன்.

ரா: ஆகா.

(சுப்பு சாஸ்திரி அவ்விடம் விட்டு செல்கிறார். உரையாடல் முடிகிறது.)

'நேரு சர்க்கார் ஒழிக' என டெல்லியில் ஆர்ப்பாட்டம்

இந்து சட்டத் தொகுப்பு எதிர்ப்பாளரின் பண்ணுடைத்தனம்!

"இந்து சட்டத் தொகுப்பு மசோதா ஒழிக!"

"நேரு சர்க்கார் ஒழிக!"

"இந்துமதம் நீடூழிவாழ்க!"

இவை கடந்த 12-ந் தேதி யன்று இந்திய டொமினியன் பார்லிமெண்ட் மண்டபத்திற்கு முன்னால், இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்பப்பட்ட ஒலிகள்.

ஆர்ப்பாட்டக்காரர்களென்றால் யாரோ ஒரு சிலர் என்று நினைத்துவிட வேண்டாம். போலீஸார் தடியடி நடத்தி கலைக்க வேண்டிய நிலையிலிருந்த ஒரு பெருங் கூட்டம். இத்தகைய ஆர்ப்பாட்டம் நடக்கும் என அரசியலார் முன்னரே அறிந்திருந்தார்களாம். ஆகவே போலீஸ் படையும் சித்தமாக வைக்கப்பட்டிருந்ததாம்.

உலகின் பல பகுதிகளில் பல போராட்டங்கள் நடைபெறுவதை நாம் பத்திரிகைச் செய்திகளால் அறிகிறோம். ஆனால் இது போன்ற ஒரு விசித்திரப் போராட்டத்தை நாம் கண்டதில்லை, கேட்டதுமில்லை. சீர்திருத்தத்திற்காக கன் போராடினர்; பழமையின் பாதுகாவலர் சீர்திருத்தவாதிகளை அடக்க அடக்குமுறைகளைக் கையாண்டனர் என்ற செய்தியைக் கேட்டதுண்டு. ஆனால், பழமையைப் போக்கி புதுமையைப் புகுத்தும் சட்டத்தைச் செய்ய அரசியலாரே முனைந்து முன் வந்திருக்கும்போது அதனை மக்களில் ஒரு சாரார் எதிர்க்கின்றனர் என்ற தலைகீழான, விரோதமான செய்தியை இப்பொழுது தான் கேட்கிறோம்.

இந்து சட்டத் தொகுப்பு மசோதா ஒரு பெரும் புரட்சிகரமான மசோதாவல்ல. இந்துமதம் என்னும் பழைய சட்டத்துக்கு மேல்பூச்சாக வெள்ளையடிக்கும் வேலைதான் இந்த மசோதா. இதற்கு இவ்வளவு எதிர்ப்பு இந்த நாட்டிலே எழுமானால் சீர்கெட்ட உள்ளம் படைத்த—நாட்டு நலத்தில் அக்கறை கொண்ட எவரும் வருந்தாமலிருக்க முடியாது.

இத்தகைய ஒரு சிறு சீர்திருத்தத்துக்கும், அதனைச் செய்ய முன்வந்த சர்க்காரே ஒழிய வேண்டுமென் கின்றனர் சனாதன வாதிகள். "நேரு சர்க்கார் ஒழிக!" "இந்து மதம் வாழ்" என்று முழக்கமிட்டிருக்கிறார்கள். அந்த சமயத்தில் பண்டித நேருவும் அந்தக் காட்சியைக் கண்டிருப்பார். இந்துமத கர்ப்பவாளிகளின் இதய ஒலிகளையும் கேட்டிருப்பார்.

நேரு சோஷலிச நாட்டமுடையவரானால், உண்மையிலேயே தன்னுடைய ஆட்சி மதச்சார்பற்ற ஆட்சியாக இருக்க வேண்டுமென்ற எண்ணமுடையவரானால், சீர்திருத்தத்தை விரும்புகிறவரானால் அவர் இப்பொழுது கட்ட நிலை ஏற்பட்டிருக்கு ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்ற அடிப்படைக் காரணங்களைச் சற்று ஆராய்ந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் தெரியும் இந்த நாட்டிற்குச் சுயமரியாதை இயக்கம் எத்தனை அவசியம் என்பது.

இந்துமத சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு பொதுவாக இந்நாட்டு ஆட்சியாளருக்கும் சிறப்பாக சென்னை மாகாண ஆட்சியாளருக்கும் மகத்தானதோர் படிப்பினையாகும். இந்த மசோதாவுக்கு மாத்திரமின்றி, இதுபோன்று எதிர்காலத்தில் எந்தச் சீர்திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டாலும் இதே போன்ற எதிர்ப்புத் தோன்றவே செய்யும். அப்படிப்பட்ட நிலைமையைச் சமாளிக்க ஒரு சீர்திருத்த இயக்கம் இந்நாட்டிற்கு இன்றியமையாத தேவைப்படும். சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் அத்தகைய சீர்திருத்தப் பணியை திமுக செய்து வருகிறது என்பதை ஆட்சியாளர் நன்கு அறிவர். அதிருந்தும் கழகத்தின் மீது காரணமின்றி அடக்குமுறைக் கணைகளை வீசுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் ஆட்சியாளருக்குத்தான் தொல்லையேற்படும் அதற்கு புதுடில்லியில் நடந்திருக்கும் சம்பவமே போதிய எடுத்துக் காட்டாகும்.

பெண் போலீஸ் படை

பம்பாய், மேற்கு வங்கம், கிழக்கு பஞ்சாப், மத்திய மாகாணம், பீகார், டெல்லி, போபால், ஐதராபாத்-தக்கணம், திருவாங்கூர்-கொச்சி யூனியன், ராஜஸ்தான் யூனியன் ஆகிய இடங்களில் பெண் போலீசார் நியமிக்கப்பட்டிருப்பதாக சர்தார் பட்டேல் 12-ந்தேதியன்று மத்திய சட்டசபையில் குறிப்பிட்டார்.

மேற்படி பெண் போலீசாருக்குத் தனிப்பட்ட சலுகைகளோ, உயர்ந்த சம்பளமோ எதுவும் தரப்படவில்லையென்றும், திருமணம் ஆனவர் ஆகாதவர் இருசாரரும் போலீஸ் படையிலுள்ளனரென்றும், ஆண்பெண் போலீசார் ஒத்த முறையிலேயே பணியாற்றி வருகின்றனரென்றும் பட்டேல் மேலும் குறிப்பிட்டார்.

தீ பரவட்டும்! (3-ம் பதிப்பு)

நல்ல தாளில், குறைந்த விலையில் விரைவில் வெளிவரும்

ஞாயிறு நூற்பதிப்பகம், பாண்டிச்சேரி.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் ரூ. 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

திருச்சி, டிச. 12—

11-12-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு தொண்டர்படைத் தலைவர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் மாநாட்டு வரவேற்புக் கமிட்டி கூட்டம் கழகப் பணிமனையில் நடந்தது. அதுசமயம் கீழ்கண்ட முடிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்குத் தலைவராக, கோவில்பட்டி நகரசபைத் தலைவர் தோழர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து அவர்களையும், மாநாட்டை துவக்கி வைப்பவராக பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்களையும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கிறது.

2. மாநாட்டின் கொட்டகைக்கு ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் பெயர் சூட்டுவது என முடிவு செய்கிறது என்பதுடன் மாநாட்டு அலுவல்களைப் பற்றிகலந்து ஆலோசனை செய்தபின், 6-0 மணிக்கு செயலாளர் பராங்குசம் நன்றி கூற இனிது முடிந்தது.

(வி. உ.)

ஐக்கிய இந்தோனேஷியா விரைவில் நிறுவனமாகும்

லண்டன், டிச. 13—

இந்தோனேஷியாவில் ஹேக் மாநாட்டிற்குச் சென்ற பிரதிநிதிகள் வந்து சேர்ந்தது முதல் தனி ஸ்டேட்டுகளாக இருக்கும் கிழக்கு ஜாவா, மேற்கு ஜாவா, கிழக்கு சுமத்ரா, மதுரா ஆகியவை குடியரசுடன் இணைந்துவிடுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டிருக்கின்றன. தங்கள் தனி ராஜ்யத்தைக் கலைத்துவிட்டு, குடியரசுடன் சேரவேண்டும் என்பதை அந்தந்த பார்லிமெண்டிலுள்ள மெம்பர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பிரதம நீதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நிலை தவிர வேறென்ன இருக்கிறதென்று கேட்கிறோம்.

எனவே, எவ்வகையில் பார்த்தாலும் ஆரிய—திராவிட பிரச்னை அலட்சியத்திற்குரியதல்ல. அல்லது நீதிபதி சொல்வதுபோல் கவலைப்பட வேண்டாத பிரச்னையுமல்ல, அது அவசியமான பிரச்னை; கவலைக்குரிய பிரச்னை; கவனிக்க வேண்டிய பிரச்னை என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

வானொலி

(15-12-49 வியாழக்கிழமை)

சென்னை

[211.3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. ராமபதி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 கே. வி. ராமஸ்வாமி—வயலின்

பிற்பகல்:

12-30 கிராமப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 [illegible] (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 எஸ். கே. துரைசாமி பிள்ளை—நாகஸ்வரம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 எஸ். முத்து மீனாட்சி—பாட்டு

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள்
8-15 டி. என். சுவாமிநாதபிள்ளை—புல்லாங்குழல்
8-40 டி. என். சுவாமிநாதபிள்ளை—புல்லாங்குழல்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-30 எஸ். ராமசாமி—பாட்டு
10-30 முடிவு

திருச்சி

[395.8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. கே. ராஜம்மா—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சுப்ரமணிய ஐயர்—இசைத்தட்டு
8-30 எம். எஸ். காளியமர்த்தனன்—வீணை

பிற்பகல்:

12-30 கிராமப்பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பெண்ணுலகம்
2-00 தமிழில் செய்திகள்
2-10 டி. ஆர். மஹாலிங்கம்—புல்லாங்குழல் (இ. த.)
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 எம். எஸ். காளியமர்த்தனன்—வீணை
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 பி. கே. ராஜம்மா—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
7-45 புத்தக விமர்சனம்
8-00 எஸ். எம். வி. வாத்திய கோஷ்டி நிகழ்ச்சி
8-15 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 இசைப்பயிற்சி பாடல்கள்
9-35 நீங்கள் கேட்டவை (இ. த.)
[illegible] முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the [illegible] Press, 214B, Mutha[illegible] Chetty Street, Madras-1.